தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 11, யுவ- திருவள்ளுவர் ஆண்டு 2026

1995 ஏப்ரல் 24, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.”

ஒருவரது நிழல் அவரை விடாது அவரது காலடியையே எப்படித் தொடருகிறதோ, அதேபோல் தீய செயல்களைச் செய்தவர்களை அதற்கான கெடுதலும் விடாது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 401, டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

401—

கண்காணிப்புக் குழு அமைத்தல்

***25753**—*டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் 1983 செம்மையாக செயல்பட பிர்கா வாரியாக கண்காணிப்புக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பாஸ் புத்தகம் என்பது நில உரிமையாளர்கள் குறித்த விவரங்கள், நிலப் பரப்பளவு, சர்வே எண் ஆகிய விவரங்களை உள்ளடக்கி அமைந்திருப்பதாலும், இந்தப் பட்டா பாஸ் புத்தகம் விவசாயிகள் நிலவள வங்கி மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து கடன் பெற அங்கீகாரச் சான்றிதழ் போல் கருதப்படுவதாலும் இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் அமல்படுத்துவதோடு, இது நல்லமுறையில் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பட்டா பாஸ் புத்தகம் திட்டத்தைக் கொண்டு வருவதிலே மிகவும் அக்கறையாக இருக்கிறது. நில உடைமையாளர்களுக்கு நிலத்தை உறுதிப்படுத்துவதற்கும், அதிலே அவர்கள் வில்லங்கச் சான்றிதழ் பெறுவதிலும், அதன் மூலம் கடன்கள் பெறுவதிலும் இன்றைக்கு பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் காலதாமதமும் ஏற்படுகிறது. இந்தப் பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கப்பட்டால், விவசாயிகள் இதைக் காண்பித்து அரசு வங்கிகளிலோ அல்லது தனியார் வங்கிகளிலோ கடன் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதால் அரசு இதை நடைமுறைப்படுத்த தீவிரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறபோது அதற்குப் புதிதாக அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டார்கள். நான் இல்லையென்று சொன்னேன். இந்தப் பட்டா பாஸ் புத்தக திட்டத்தைச் சரிவர செய்யவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வட்டத்திற்கும், ஒரு துணை வட்டாட்சியர், மூன்று வருவாய் ஆய்வாளர், ஒரு தட்டச்சர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு துணை ஆய்வாளர், ஒரு புலன் ஆய்வாளர், அலுவலக உதவியாளர் என 19 பேர் போடப்பட இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறபோது எல்லா இடங்களிலும் இது நடத்தப்படுமா என்று கேட்டார்கள். மாநிலம் முழுவதும் நடத்தப்படும். அதில் முதல் கட்டமாக, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோவை மாவட்டம், மதுரை மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் என இப்படித் தமிழகத்திலே பல்வேறு இடங்களிலும், ஒரே இடத்தில் குவியாமல், பல இடங்களில் இதைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும், விரைவிலே செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 24]

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பாஸ் புத்தகத் திட்டம் 1983 என்ற உன்னத திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முறையாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் சட்டபூர்வமாகக் கருதப்படுவதால் நில விற்பனை செய்கின்றபோது, சப்ரிஜிஸ்திரார் அலுவலகத்தில் இதை தாக்கல் செய்து நிலமாற்றம் பற்றிய அனைத்து விவரங்களையும் அதில் பதிவு செய்ய, நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பட்டா பாஸ் புத்தகத்தைப் பற்றியும் அதிலுள்ள விவரங்கள் பற்றியும் தெரிந்து வைத்துக்கொண்டு கேட்கிறபோது நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதுபோல, எல்லா உறுப்பினர்களும் இதைப் பற்றி தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாலும், தெரியாத சில விஷயங்களை பற்றியும் தெரிந்து வைத்துக்கொண்டால் அவரவர்கள் தொகுதியில் உள்ள பொதுமக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

முற்பகல் 10-05

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் பட்டாக்கள் வழங்குகிறபோது பழங்காலத்தில் ஓடைப்புறம், கண்மாய்ப்புறம், களப்புறம் என்று அரசு நிர்ணயம் செய்தது. இப்போது அங்கே ஓடைகள் இல்லாமல் கண்மாய்கள் இல்லாமல் புறம்போக்காக இருந்து, மக்கள் குடிசைகளில் வாழ்கின்றார்கள். அந்த இடங்களில், பழங்காலத்து ரிக்கார்டுகளை வைத்து பட்டாக்கள் வழங்கப்படும் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். தற்போதைய சூழ்நிலையை அறிந்து அதற்கேற்ப பட்டா வழங்க அமைச்சர் அவர்கள் புதிய யுக்திகளைக் கையாளுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்குவது என்பது இன்றைக்கு வருவாய்த்துறை கொடுக்கிற நில உரிமைப் பதிவேடு. நில உரிமைப் பதிவேடு என்றால் அவர்களுக்கு இருக்கிற உரிமைகள் பூராவும் அதிலே இருக்கும். அது மட்டுமல்ல. அதிலே அவர்களுடைய போட்டோவும் ஒட்டப்படுகிறது. அதோடு, இது நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக ரெக்சின் பைண்டிங் செய்கிறோம். இந்த பைண்டிங்குக்காக மாத்திரம் 1 கோடியே 80 லட்ச ரூபாய், இந்த அரசு

[1995 ஏப்ரல் 24

புரட்சித் தலைவி அரசு ஒதுக்கியிருக்கிறது. இதற்கு வேண்டிய எல்லா காரியங்களும் நடைபெறுகின்றன. இதற்கு மத்திய அரசிடம் நாங்கள் பணம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். மத்திய அரசு வழக்கம் போல் இதற்கும் கையை விரித்து விட்டது. மத்திய அரசு கையை விரித்தாலும் அதுபற்றி பாதகம் இல்லை என்று இதற்கு ஒரு கோடியே 80 லட்ச ரூபாய், நல்ல அட்டையாக போடுவதற்காக மட்டுமே இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. புத்தகம் அடிக்க வேண்டியிருக்கிறது. களத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, பட்டா கொடுப்பது என்பது மட்டுமல்ல பிரச்சினை. உங்களுக்கு நான் இதைச் சொல்வதற்குக் காரணம், சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல எனக்கு அருகாமையில் அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் கூட நான் என்ன சொல்லுகிறேன் என்பதைக் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்வதை எல்லோரும் கவனியுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா புத்தகம் சும்மா கொடுத்து விடுவது இல்லை. அந்தப் பட்டா புத்தகத்தில் என்ன என்ன எழுதப்படுகிறதோ அதை அதிகாரப்பூர்வமாக அந்த வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் கையெழுத்துப் போட்டு கொடுக்கிறார். சில இடங்களில் தவறுகள் நடக்கின்றன என்பதனால் இந்தப் பட்டா புத்தகத்தில் என்னென்ன விவரங்கள் இருக்கின்றன, எந்த உரிமையாளருக்கு இது கொடுக்கப்படுகிறது, பட்டா கொடுப்பதற்கு முன்னால் இந்த விவரங்ககள் அந்தந்த கிராமங்களில் வெளியிடப்படும். அந்தந்த வட்டங்களில் வெளியிடுவது மட்டுமல்ல. ஒரு வட்டத்தில் 100 பட்டா பாஸ் புத்தகம் கொடுக்க வேண்டுமென்றால் 100-ஐயும் கொடுத்து விடுவது இல்லை. 100-ஐயும் கொடுத்து விட்டால் தவறு ஏற்பட்டுவிடும் என்பதற்காக இந்தப் புரட்சித்தலைவி அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தவறே நடக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதால்—இதை இங்கு சொல்வதற்குக் காரணம், இது வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால் இங்கே இருக்கிற அவ்வளவு உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்களும், செய்தித்தாள் மூலமாக நான் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லோரும் இதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இது திறம்பட, நல்லபடியாக நடைபெறும். அப்படி நடைபெற வேண்டுமானால் கடைசியில் கொடுக்கப்போகிறோமே அதனுடைய மாதிரி எல்லா கிராமங்களிலும் அறிவிப்பாக போடப்படுகின்றன. எல்லா கிராமங்களிலும் அத்தனை பேர்களுக்கும் போடுவது இல்லை. முதலிலே 50 சதவீதம் போடப்படுகிறது. 50 சதவீதத்தை கொடுத்து விட்டால் அதிலே தவறு இருக்கிறதா இல்லையா என்று கிராமங்கள்ிலேயிருந்து வந்து சொல்வார்கள்.

1995 ஏப்ரல் 24]

நீங்கள் கொடுத்த பட்டா பாஸ் புத்தகம் சரியாக இல்லை. நில உரிமைப் பதிவேடு சரியாக இல்லையென்று அவர்கள் சொன்னால் திருத்த வாய்ப்பு இருக்கிறது. எல்லாவற்றையும் கொடுத்து விட்டு திருத்துவதை விட முதலிலே 50 சதவீதத்தைக் கொடுத்தால் நல்லது. எப்படி நடக்கிறது என்பதற்கு மாதிரியாக 50 சதவீதம் எல்லா கிராமங்களிலும் போடப்படுகிறது. இதை நீங்கள் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அது மட்டுமல்ல. அங்கங்கே இது அறிவிக்கப்பட உள்ளது. உங்களுடைய தொகுதிகளில் பட்டா பாஸ் புத்தகம் தவறாகக் கொடுக்கப்பட்டால் அதற்கு அதிகாரிகள் காரணம் என்று நீங்கள் சொல்லக் கூடாது; தவறாக கொடுக்கப்பட்டால் அந்தக் கிராமத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்தக் கிராமத்திலே போட்டு விடுகிறோம். தவறு என்றால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியது உங்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டா பாஸ் புத்தகம் வழங்குவதிலே சில நேரங்களில் நிறைய சப்டிவிஷன் நெம்பர்கள் எல்லாம் கொடுக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 32 இருக்கிறது. 32 ஏ, பி, சி, டி. என்ற நிறைய நெம்பர்கள் எல்லாம் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற பட்சத்திலே அந்த நெம்பர்களை எல்லாம் சேர்த்து அவர்களுடைய எக்ஸ்டன்சன் எவ்வளவு இருக்கிறதோ, அவற்றைப் பூராவையும் ஒரே நெம்பராக கொடுத்தால், சப் டிவிஷன் பண்ணிய நெம்பர்களையெல்லாம் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒன்றரை கோடி புல எண்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறது. ஒருவருக்கு நிலம் இருக்கிறது என்றால், அது ஒரு இடத்தில் இருப்பதில்லை. ஒரே இடத்தில் பல இடங்களில் தனித்தனியாக இருக்கின்றன. சில புல எண்களில் 50 ஏக்கர்கள் இருக்கின்றன. சில புல எண்களில் 10 செண்ட் இருக்கிறது. இந்த மாதிரி பல்வேறு இடங்கள் இருக்கின்றன. எல்லா புல எண்களிலும் சர்வே நெம்பர் சொல்கிறார், பட்டா நெம்பர் சொல்கிறார். எல்லா சர்வே எண்களில் உள்ள நிலங்களை ஒன்றாகச் சேர்ப்பது என்றால், அவர்களுக்கு பல இடங்களிலே நிலம் இருக்கிறது. ஒரே இடத்தில் ஒன்றாக இருந்தால் அந்த புல எண்களை குறைத்தால் அரசுக்கும் நல்லது. இருக்கிற அதிகாரிகளுக்கும் நல்லது. ஆனால் புல எண் ஒரே இடத்தில் யாருக்காவது

நிலம் சொந்தமாக இருந்து, சேர்ந்தாற்போல் இருந்தால், அந்த புல எண்களில் உள்ள நிலங்களை ஒன்றாக சேர்க்க வேண்டுமென்று சொன்னால் மனு கொடுத்தால் அரசு அதை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிமுகப்படுத்த இருக்கின்ற பட்டா புத்தகத்தில் புதிய சப்டிவிஷன்படி நிலங்களை அளந்து அதைக்குறிப்பதாக அறிகிறேன். பழைய அளவுக்கும், புதிய சப் டிவிஷனுக்கும் பல்வேறு வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுகள் சரியில்லை என்று கூட நீதிமன்றங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி புதிய சப்டிவிஷன்படி நிலங்களை அளந்து அந்தப்பட்டா புத்தகத்தில் பதிவு செய்துவிட்டால் பழைய நிலங்களை வைத்திருப்பவர்கள் பாதிக்கப்பட மாட்டார்களா? அந்த வழக்குகள் பாதகமாக முடியாதா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் என்று புரட்சித் தலைவர் ஆட்சியில் வந்தது. 50,60 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்னால் நிலத்தை அளந்தார்கள். அதற்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிறகு வந்த ஆட்சி அதை அப்படியே, நிலத்தைப் பற்றி கவலைப்படாமல் விட்டுவிட்டார்கள். புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகு நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது மட்டுமல்ல. அதை நடைமுறைப்படுத்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அந்த நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம், அங்கே நிலம் யாருடைய அனுபோகத்தில் இருக்கிறது. யாருடைய பேரிலே பட்டா இருக்கிறது. அனுபோகதாரர் உண்மையான அனுபோகதாரரா என்று தெரிந்து கொள்வதற்காக எல்லா களத்திற்கும் சென்று அதைப் பார்வையிட்டார்கள். அதற்காக ரூ. 150 கோடி செலவு செய்து எல்லாவற்றையும் பண்ணியாகிவிட்டது. சில நேரங்களில் அதிகாரிகள் அங்கே வருகிறார்கள் என்பது பறைசாற்றப்பெற்றது. பறைசாற்றப்பெற்றது மட்டுமல்ல,கட்சிக்கு அப்பாற்பட்டு அந்த ஊரில் யார் வயதானரோ, விவரம் தெரிந்தவரோ அவருடைய தலைமையில் எல்லா இடங்களிலும் கூட்டங்கள் போடப்பட்டது. கூட்டங்களைப் போட்டு 4-ம் தேதி அல்லது இந்த தேதியில் எங்களுடைய அரசு அதிகாரிகள் களத்திற்கு வருவார்கள், நிலத்தைப் பார்ப்போம் என்றும் அப்போது யார் வேண்டுமானாலும் வந்து சொல்லலாம் என்றும் சொன்னோம். எல்லாவிதமான சடங்குகளையும் ஒழுங்காக முயன்று செய்து, சில இடங்களிலே அதற்குப் பிறகு இந்த ஆட்சி புரட்சித் தலைவி ஆட்சி வந்தபிறகு, அதற்குப் பிறகு நான் வருவாய்த் துறை அமைச்சரான பிறகு மீண்டும் நாம் செய்தது எல்லாம்

1995 ஏப்ரல் 24]

எப்படி இருக்கிறது என்று நான் ஆய்வு செய்தேன். அப்படி செய்த இடங்களிலே சில இடங்களிலே தவறு இருக்கிறது. இத்தனை சடங்குகளுக்குப் பிறகும் சில தவறுகள் இருக்கின்றன என்பது ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்பட்டது. அப்படி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு கூட இன்றைக்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரிலிருந்து, கோட்ட வருவாய் அதிகாரியிலிருந்து, மாவட்டத்தினுடைய வருவாய் அதிகாரியிலிருந்து, வட்ட ஆய்வாளரிலிருந்து, எல்லோரும், ஒவ்வொருவரும் தனித்தனியே 5 கிராமங்களுக்கு சென்று இதையும் ஆய்வு செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே தவறு இருக்கிறது. அதை சரிசெய்யச் சொல்லியிருக்கிறோம். ஆகையினால் இங்கே மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால்—எல்லோரையும் என்னையும் சேர்த்துதான் சட்டமன்ற உறுப்பினர்கள்—என்னையும் சேர்த்தே சொல்கிறேன். இதிலே அமைச்சர்களும் வருகிறார்கள். ஆக உங்களுடைய தொகுதியில் எங்கே தவறு இருக்கிறது? நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் எந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று உங்களால் சொல்லப்படவேண்டும். நீங்கள் குறைந்தது 5 கிராமங்களுக்குச் சென்று அந்த 5 கிராமங்களிலே எந்தெந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று அதை என்னிடத்திலே கொடுத்தால் அதை நான் ஒரு உதாரணமாக வைத்துக் கொள்வேன். அதாவது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல நீங்கள் 5 கிராமங்களுக்குச் சென்று இன்னின்ன இடத்திலே தவறு இருக்கிறது என்று என்னிடத்திலே வந்து சொன்னால், இது உங்களுடைய பணி, அரசு அதிகாரியினுடைய பணியல்ல, உங்களுடைய பணி கூட, அதை என்னிடத்திலே கொடுத்தால், அரசு அதிகாரிகளுக்குக் கொடுத்து இன்னின்ன கிராமங்களிலே தவறு இருக்கிறது, நீங்கள் சரியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்களே என்பேன். உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன் (மணியடிக்கப் பெற்றது)

மன்னிக்க வேண்டும். அமைச்சர்களுக்கு எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. நான் அவர்களைப் போல ஒரு சாதாரண அமைச்சர்தான். இருந்தாலும் நான் மக்களுடைய நலன் கருதி, அமைச்சர்கள் பேசுகிறபோது நான் திரும்பிப் பார்த்ததை அவர்கள் தவறாக கருதக் கூடாது. ஏனென்றால் நிலவுடமைப் பதிவேடு என்பது மிக முக்கியமானது. முதலமைச்சருக்கு மட்டும் அதிலே பொறுப்பு இல்லை. எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு வருவாய்த் துறை அமைச்சருக்கு மட்டும் பொறுப்பு இல்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்கிறபோது இங்கே இருக்கின்ற அமைச்சர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது இதிலே. அதானால் நான் திரும்பச் சொன்னதற்கு அமைச்சர் எல்லோரும் மன்னித்துக் கொள்ள வேண்டும்.

[1995 ஏப்ரல் 24

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எல்லோரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: ஆகையால், இதிலே நீங்கள் எந்த இடத்திலே வேண்டுமானாலும், மாண்புமிகு பரமசிவம் அவர்கள்கூட அவர்களுடைய தொகுதிக்குச் சென்று, 5 கிராமங்களுக்குப் போய் பார்த்துவிட்டு, நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் இன்னின்ன குறை இருக்கிறது என்று என்னிடத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி அமைச்சரும் சொல்லவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்ல வேண்டும். இப்போதுகூட வருகிற சனி, ஞாயிறுகளில் போய் 5 கிராமங்களைப் பார்த்து, இந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று சொன்னால், அதற்குப் பிறகு இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள்ளேகூட, வருவாய்த் துறை அதிகாரிகளை அனுப்பி இன்னின்ன இடத்திலே தவறு இருக்கிறது, இந்தமாதிரி தவறு இருக்கிறது. இந்த உரிமையாளரிடம் தவறு இருக்கிறது என்று சொல்லி, கேட்டு, இந்தச் சட்டமன்றம் முடிவதற்கு முன்பேகூட நான் உங்களுக்குப் பதில் தருவேன் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 402, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு அமைச்சர்.

402—

பகுதி நேர கூட்டுறவு அங்காடி அமைத்தல்

***17518**—*திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து, சிலம்பவளங்காடு கிராமத்திற்கு பகுதிநேர கூட்டுறவு உணவுப் பொருட்கள் வழங்கும் அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து சிலம்பவளங்காடு கிராமத்திற்கு உணவுப் பொருள் வழங்கும் பகுதிநேர அங்காடி ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது.

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS